MCOP.No. 321/2023
Date : 10.10.2025
Pw – 1
பெயர்: மகமாயி
க/பெ: முருகேசன்

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் விபத்து சமயத்தில் அவர் ஓட்டி சென்ற வாகனத்தை சாலையின் இடதுபுற ஓரமாக மிதமான வேகத்தில் ஓட்டி சென்றார்என்று சொன்னாலும் எனது மகன் சரண்ராஜ் தான் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தில் தாமாக வந்து மோதி விபத்தை வலிய ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

TN46 R 6133 பதிவெண் கொண்ட Hero splender plusஇரு சக்கர வாகனம் எனது கணவருக்கு சொந்தமானது. விபத்து தேதியில் மேற்படி வாகனத்திற்கு பதிவு சான்றிதழ், காப்புறுதி சான்றதிழ் நிலுவையில் இஇருந்து வந்தது. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்தில் ஈடுபட்ட இரு வாகனங்களளும் நேருக் கு நேர் மோதிக்கொண்டது என்று சொன்னால் சரிதான். இரு சக்கர வாகனத்தை போலிசார் ஆய்வுக்காக கைப்பற்றினார்கள் என்று சொன்னால் சரிதான். புகாரை தவிர இந்த விபத்து சம்மந்தமாக வேறு குற்ற வழக்கு ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணங்களை தாக்கல் செய்தால் என்னுடைய வழக்கிற்கு பாதமாக போகும் என்பதால் தான் அந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தலைகவசம் அணியாமல் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல் எனதுமகன் அவராகவே விபத்தை வலிய ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. மாத வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு சத்ரியன் என்ற இன்னொரு மகன் உள்ளார். எனது கணவர் விவசாய கூலி வேலை செய்கிறார். எனது கணவரின்

வருமானத்தில் தான் எங்கள் குடும்பம் இயங்கி வந்தது என்று சொன்னால் சரியல்ல. என்னை தவிர மற்ற இரண்டு மனுதாரர்களும் இறந்துபோனவரை சார்ந்துவாழவில்லை என்று சொன்னால் சரியல்ல. கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்று சொன்னால் சரியல்ல. விபத்துக்கு எனது மகனின் கூட்டுபொறுப்பு காரணம் என்பதால் இரு சக்கரவாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்புறுதி நிறுவனத்தை தரப்பினராக சேர்க்காதமனு செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

Sd/–மகமாயி

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.